# 21

# அல்குர்ஆனைக் கற்போம் – I

## ஸூரா அல் அலக்

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ ﴿١﴾ خَلَقَ الْإِنسَانَ مِنْ عَلَقٍ ﴿٢﴾ اقْرَأْ وَرَبُّكَ

الْأَكْرَمُ ﴿٣﴾ الَّذِي عَلَّمَ بِالْقَلَمِ ﴿٤﴾ عَلَّمَ الْإِنسَانَ مَا لَمْ يَعْلَمْ ﴿٥﴾

அல்லாஹ் தன் இறுதித் தூதர் முஹம்மத் ﷺ அவர்களுக்கு வழங்கிய வேதம் அல்குர்ஆன் ஆகும். அல்லாஹ் நபிமார்களுக்கு அவர்களது நுபுவ்வத்தை உண்மைப்படுத்தும் சான்றுகளாக முஃஜிஸாத்துக்களை வழங்கினான். நபி ﷺ அவர்களுக்கு வழங்கிய, காலத்தால் அழியாத முஃஜிஸாவாக அல்குர்ஆன் விளங்குகின்றது. அதன் மொழிநடை, கருத்துச் செறிவு, உள்ளடக்கம் என்பன அதன் அற்புதத் தன்மைக்கும், அது மனித ஆக்கம் அல்ல என்பதற்கும் சான்றுகளாகின்றன.

அல்குர்ஆன் வஹிமூலம் கட்டங்கட்டமாக அருளப்பட்டது. அல்குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து ஜிப்ரில் (அலை) அவர்கள் ஊடாக நபி ﷺ அவர்களுக்கு வஹியாக ஓதிக் காண்பிக்கப்படும்போது நபி ﷺ அவர்கள் அதனை மனனம் செய்து, எழுதக் கூடிய தன் தோழர்களுக்கு ஓதிக் காட்டுவார்கள். அவர்கள் அதை எழுதிய பின் நபி ﷺ அவர்களுக்கு மீண்டும் அதனை ஓதிக் காட்டுவார்கள். இவ்வாறாக அல்குர்ஆன் முழுமையாக அருளப்படுவதற்கு 23 வருடங்கள் எடுத்தன.



இலவச விநியோகத்திற்காக



நபி ஸ அவர்களின் வபாத்துக்கு முந்திய றமழான் மாதத்தில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் முழுக் குர்ஆனையும் நபி ஸ அவர்களுக்கு ஓதிக் காண்பித்தார்கள். அதேபோல் நபி ஸ அவர்கள் ஓத ஜிப்ரீல் (அலை) அவர்கள் அதனைச் சரிபார்த்தார்கள். இதே ஒழுங்கில்தான் பின்னர் அது தொகுக்கப்பட்டது. அத்துடன் இன்றுவரை அதன் ஓர் எழுத்தும் மாற்றமுறாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. வாழ்வில் சகல துறைக்கும் வழிகாட்டும் இவ்வற்புத மறையே இஸ்லாமிய ஷரீஅத்தின் முதல் சட்ட மூலாதாரமாகும். அதன் இனிய போதனைகள் சிலதை இப்போது நோக்குவோம்.

### ஸூரா அல் அலக்

''அலக்'' என்ற அத்தியாயம் தொகுப்பொழுங்கில் தொண்ணுற்றாராவது இடத்தில் இருப்பினும், அதன் முதல் ஐந்து வசனங்களுமே முதன் முதலாக அருளப்பட்ட இறைவசனங்கள் ஆகும். நபி ஸ அவர்கள் ஹிராக் குகையில் தனித்திருந்தபோது ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி ஸ அவர்களிடம் வந்து அவ்வைந்து வசனங்களையும் ஓதிக் காண்பித்தார்கள். அவ்வசனங்களும் அவற்றின் பொருளும் வருமாறு

1. (நபியே) ஓதுவீராக / வாசிப்பீராக — اِقْرَاْ

   உமது இரட்சகன் பெயரால் — بِاسْمِ رَبِّكَ

   படைத்தவனாகிய — اَلَّذِي خَلَقَ

| | |
|---|---|
| 2. அவன் படைத்தான் | خَلَقَ |
| மனிதனை | الإِنْسَانَ |
| இரத்தக் கட்டியிலிருந்து | مِنْ عَلَق |
| 3. (நபியே) ஓதுவீராக / வாசிப்பீராக | إِقْرَأْ |
| உமது இரட்சகன் | وَرَبُّكَ |
| மாபெரும் கொடையாளி | الأَكْرَمُ |
| 4. அவன் தான் கற்பித்தான் | اَلَّذِي عَلَّمَ |
| பேனாவினால் | بِالْقَلَمِ |
| 5. அவன் கற்பித்தான் | عَلَّمَ |
| மனிதனுக்கு | الإِنْسَانَ |
| (மனிதன்) அறியாதவற்றையெல்லாம் | مَالَمْ يَعْلَمْ |

இனி நாம் மேற்படி வசனங்களின் விளக்கங்களை நோக்குவோம்.

### 1ஆம் வசனம்

''படைத்த உம் இரட்சகன் பெயரால் வாசிப்பீராக/ஓதுவீராக!''

இது கல்வியின் முக்கியத்துவத்தையும், கல்வி தேடல் அல்லாஹ்வின் பெயரால்; அதாவது ஈமானின் அடிப்படையில் அமையவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது.

### 2ஆம் வசனம்

''மனிதனை 'அலக்' இனால் படைத்தான்''

'அலக்' என்ற அரபுச் சொல்லுக்கு ஒட்டி நின்று இரத்தம் உறிஞ்சும் அட்டையென்றும் ஒரு கருத்துண்டு. மனிதன் தன் தாயின் கருவறைச் சுவரில் அட்டை போல் ஒட்டிய ஒரு நிலையில் இருந்துள்ளான். இத்தகைய அற்ப

நிலையில் இருந்த மனிதனைத்தான் அல்லாஹ் அழகிய தோற்றத்தில் வடிவமைத்துள்ளான். கட்டம் கட்டமான மனிதனின் உருவாக்கத்தை அல்குர்ஆன் இன்னோர் இடத்தில் இவ்வாறு விளக்குகின்றது.

''நிச்சயமாக நாம் (ஆதி) மனிதனை களி மண்ணின் சத்திலிருந்து படைத்தோம். பின்னர் அவனை நாம் ஒரு பாதுகாப்பான இடத்தில் விந்துத் துளியாக வைத்தோம். பின் அந்த விந்துத் துளியை 'அலக்' ஆக ஆக்கினோம். பின்னர் 'அலக்'ஐத் தசைப்பிண்டமாக்கினோம். பின் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாக்கினோம். பின் அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம். பின் அவனை முற்றிலும் வேறுபட்ட ஒரு படைப்பாக உருவாக்கினோம். அழகிய படைப்பாளனான அல்லாஹ் பாக்கியம் நிறைந்தவன்.'' (23:12,13)

### 3ஆம் வசனம்

'' வாசிப்பீராக உமது இறைவன் மாபெரும் கொடையாளி''

அல்லாஹ்வின் அருட்கொடைகளை மனிதனால் எண்ணி முடிக்க முடியாது.

''அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக்கிட்டால் நீங்கள் எண்ணி முடிக்க மாட்டீர்கள்'' (16:18)

கற்ற மனிதனே இவ்வுண்மையைப் புரிந்து கொள்வான். எனவே தான் வாசிப்பீராக என்று மீண்டும் பணிக்கின்றான்.

### 4ஆம் வசனம்

''அவன்தான் பேனாவினால் கற்பித்தான்''.

இது பேனாவினால் எழுதக் கற்றுக் கொடுத்ததன் மூலம் அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

### 5ஆம் வசனம்

''மனிதன் அறியாதவற்றை எல்லாம் கற்றுக் கொடுத்தான்''

இவ்வசனத்தை இன்னொரு அல்குர்ஆன் வசனத்தைக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம்.

''ஆதமுக்கு அனைத்து பெயர்களையும் கற்றுக் கொடுத்தான். பின்னர் அவற்றை மலக்குகளுக்குக் காண்பித்து நீங்கள் உண்மையாளர்களாயின் இப்பெயர்களை எனக்கு அறிவியுங்கள் என்றான்'' (2:31)

ஆதிமனிதன் ஆதம் அறிய வேண்டியவற்றை எல்லாம் அல்லாஹ் அவருக்குக் கற்றுக் கொடுத்தான். மலக்குகளுக்குக் கற்றுக் கொடுக்காத பலவற்றை ஆதமுக்குக் கற்றுக் கொடுத்ததன் மூலம் அவரைச் சிறப்பித்தான்.

உலகம் அன்று அறியாமையிலும் இறை நிராகரிப்பிலும் மூழ்கியிருந்தது. அகிலத்துக்கு ஆசிரியராக அனுப்பப்பட்ட நபி ﷺ அவர்கள் அல் - குர்ஆனின் மூலம் மகத்தான ஓர் அறிவியற் சிந்தனையைத் தோற்றுவித்தார்கள். அதன் விளைவாகவே மத்திய காலப்பகுதியில் அறியாமை இருளில் மூழ்கியிருந்த உலக மக்கள், கல்வி எனும் ஒளியைப் பெற்றுக் கொண்டனர்.

இம்மகத்தான சாதனையை நிறைவேற்றிய அல்குர்ஆனை வழிகாட்டியாகக் கொண்டுள்ள நாம் கல்வியை ஆர்வத்தோடு கற்பது எமது கடமையல்லவா?

**பயிற்சி:**

1. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றுக்கு (✓) எனவும், பிழையான வற்றுக்கு (✗) எனவும் எழுதவும்.

   அ. முஸ்லிம்கள் கல்வித்துறையில் சாதனைகள் புரிய அல்குர்ஆனின் போதனைகள் தூண்டுதலாய் இருந்தன. (   )

   ஆ. அல்லாஹ்வின் பெயரால் கல்வியைத் தேடுபவன் அல்லாஹ்வின் வழியில் இருக்கின்றான். (   )

   இ. அல்லாஹ்வின் வசனங்களை நபி ﷺ அவர்கள் எத்திவைத்த போது மக்கள் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டனர். (   )

   ஈ. அல்லாஹ்வின் உதவியின்றி மனிதன் கல்வி பெற முடியாது. (   )

   உ. முஹம்மத் ﷺ அவர்கள் இறைத்தூதர் என்பதற்கு அல்லாஹ்வின் வசனங்களே சான்றாகும். (   )

2. பின்வரும் சொற்களுக்குரிய அரபுப் பொருளை இப்பாடத்தில் தரப்பட்ட அல்குர்ஆன் வசனங்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

   படைத்தான், மனிதன், இரத்தக்கட்டி, பேனா, கற்பித்தான்.

3. ஸூரா அலக்கின் முதல் ஐந்து வசனங்களுக்குமான மொழிபெயர்ப்பு அரபு வாக்கிய ஒழுங்கில் தரப்பட்டுள்ளதை மேலே அவதானித்திருப்பீர் கள். அவற்றைத் தமிழ் மொழி வாக்கிய மரபுக்கேற்ப பொருள் விளங்குமாறு ஒழுங்குப்படுத்தி ஐந்து வசனங்களையும் தனித்தனி வாக்கியங்களாக எழுதுக.

   உ+ம் (நபியே) படைத்தவனாகிய உமது இரட்சகன் பெயரால் ஓதுவீராக.